13.09.2017

தினமணி

## பாபநாசம், கருப்பாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையால் கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 2 நாள்களில் 8 அடியும், பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2 அடியும் உயர்ந்துள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 7 மி.மீ., பாபநாசம் கீழ் அணையில் 3 மி.மீ., கருப்பாநதி அணையில் 1 மி.மீ., குண்டாறு அணையில் 2 மி.மீ., அடவிநயினார் அணையில் 3 மி.மீ., ஆய்க்குடியில் 14 மி.மீ. மழை பதிவாகியிருந்தது.

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 609.49 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 64 கனஅடி, கடனாநதி அணைக்கு 50 கனஅடி, கருப்பாநதி அணைக்கு 111 கனஅடி, அடவிநயினார், ராமநதி அணைகளுக்கு தலா 10 கனஅடி, கொடுமுடியாறு அணைக்கு 5 கனஅடி நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 71.15 அடியாக இருந்தது. பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து குடிநீருக்காக 504.75 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. சேர்வலாறு அணை நீர்மட்டம் 57.87 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 2 நாள்களில் 2 அடி உயர்ந்து 36.20 அடியாக இருந்தது.

கடனாநதி அணை நீர்மட்டம் 59 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 66.75 அடி, கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 2 நாளில் 8 அடி உயர்ந்து 45.28 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் 36.10 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 86.50 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 3.25 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 5.63 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 17 அடியாக இருந்தது.

கடனாநதி அணையில் இருந்து 50 கனஅடி, ராமநதி, அடவிநயினார் அணைகளில் இருந்து தலா 20 கனஅடி, கருப்பாநதி, கொடுமுடியாறு அணைகளில் இருந்து தலா 5 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. குண்டாறு அணை முழுக் கொள்ளளவை எட்டியுள்ளதால் அணைக்கு வந்து கொண்டிருந்த உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன.